# வாக்குமூலம்

## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

## வழக்கு எண். CC 725/2020

## வழக்கு சாட்சி LW1 / PW1

| பெயர் | முகுந்த ராமானுஜம் | ஜாதி | |
|---|---|---|---|
| கணவர்/தந்தை | கோபாலகிருஷ்ணன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 56 |

<u>தேதி 12.11.2025</u>

எதிரி ஆஜர் இல்லை. மனுதாரர் தரப்பு 355 பி.என்.எஸ் பிரிவின் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

<u>முதல் விசாரணை</u>

நான் மாத்தூர் பகுதியில் குடியிருந்து வருகிறேன். 25.05.2019 அன்று அதிகாலை நான் கோவிலுக்கு செல்வதற்கு முன்பு டீ சாப்பிட செல்லும் முன்பு வீட்டை பூட்டி ஜன்னலில் சாவியை வைத்து விட்டு கடைக்கு சென்றேன். வீட்டின் உள்ளே எனது மனைவி, குழந்தைகள் தூங்கி கொண்டிருந்தார்கள். பக்கத்து வீட்டுக்காரர் கடையில் இருந்த என்னை பார்க்க ஓடி வந்தார். நான் என்னவென்று கேட்டபோது எனது வீட்டில் திருட்டு நடப்பதாக கூறினார். எனது வீட்டில் சென்று பார்த்தபோது கதவு திறந்திருந்தது. அறையில் இருந்த பீரோவும் திறந்து 10 1/2 சவரன் நகை திருடு போயிருந்தது. காலை காவல் நிலையம் சென்று என்னிடம் காட்டப்படும் புகாரினை அளித்தேன். மேற்படி புகாரானது அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதில் 6 1/2 சவரன் செயின், 3 பவுன் வளையல், 1/2 சவரன் மோதிரம், 1/2 சவரன் கம்மல் ஆகும். 8 மாதம் கழித்து போலிசார் நகை கிடைத்துவிட்டதாக

கூறினார்கள். நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுக்கொண்டேன். யார் திருடியது என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

சம்பவம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் ஆமாம். புகாரில் எழுதிய கையெப்பம் என்னுடையது அல்ல என்றால் ஆமாம். பக்கத்து வீட்டுக்காரர் எழுதினார். போலிசார் எத்தனை மணிக்கு சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்றால் அதிகாலை 3.00 மணிக்கெல்லாம் வந்துவிட்டார்கள். கைரேகை பதிவினை வீட்டில் எடுத்தார்கள் என்றால் ஆமாம். சொன்ன நேரத்தில், சொன்னபடி சம்பவம் ஏதும் நடக்கவில்லை என்றாலும், எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை